**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, TIRUVANNAMALAI.**

**SESSIONS CASE NO. 112/2018**

**Deposition of Witness for : PW.4**

| | |
|---|---|
| **Name** | : திரு. அருண் சுந்தர பாண்டியன் |
| **Husband Name** | : |
| **Village** | : |
| **Taluk** | : |
| **Caste** | : |
| **Calling** | : |
| **Religion** | : |
| **Age** | : |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 05-10-2020.**

முதல் விசாரணை.

நான் தற்போது சிறுபூண்டி கிராமத்தில் விவசாயம் செய்து வருகிறேன். அ.சா.1 முதல் அ.சா.3 வரையானவர்களை எனக்கு தெரியும். அ.சா.1 என்னுடைய தங்கை. ஆஜர் எதிரிகளை தெரியும். 27.5.2016 மாலை 7 மணியளவில் அ.சா.1 அவருடைய கணவர் செல்வத்தை 1, 2 எதிரிகள் மற்றும் பார்த்திபன் அடித்து போட்டு விட்டதாக எனக்கு தொலைபேசியில் கூறினார். நான் வீட்டிற்கு சென்று பார்த்த போது செல்வம் சுயநினைவு இல்லாமல் திண்ணையில் போட்டு வைத்து இருந்தார்கள். அவரை 108 ஆம்புலன்ஸ் மூலம் திருவண்ணாமலை அரசு மருத்துவமனை கொண்டு சென்றோம். பின்னர் வேலூர் சி.எம்.சி மருத்துவமனை கொண்டு சென்றோம். அங்கும் முடியாது என்று கூறியதால் அருகில் இருந்த தனியார் மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். அங்கும் சிகிச்சை அளிக்க முடியாது என்று கூறியதால் சென்னை ராஜீவ் காந்தி மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். செல்வத்தை என்னுடைய சகோதரர் மாசிலாமணி பார்த்துக் கொள்ள அ.சா.1ம் நானும் கீழ்பென்னாத்தூர் காவல் நிலையம் வந்து புகார் கொடுத்தோம். 29.5.2016ல் மருத்துவமனையிலேயே செல்வம் இறந்து விட்டார். பின்னர் டி.எஸ்.பி மருத்துவமனையிலேயே வந்து விசாரணை செய்தார். செல்வத்திற்கு தலையின் பின்புறம் காயம் இருந்தது. போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை.. இல்லை

Taken down by me in Open Court read over ot the witness and to knowledged by him/her as correct

Sd/- Irusan Poonguzhali,
Additional District Judge,
Tiruvannamalai.